மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் ' இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

(உ) சென்னை மாநகரக் குடியிருப்போர் பாதுகாப்பு (திருத்த) சட்ட முன்வடிவு, 1994.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 1994-ஆம் ஆண்டு சென்னை மாநகரக் குடியிருப்போர் பாதுகாப்பு (திருத்த) சட்டமுன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 52/1994), மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு.எஸ்.டி. சோமசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1994-ஆம் ஆண்டு சென்னை மாநகரக் குடியிருப்போர் பாதுகாப்பு (திருத்த) சட்ட முன்வடிவு @(சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 52/1994) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெறவேண்டும்".

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சி. ஞானசேகரன்.

பிற்பகல் 12–35

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, Madras City Tenants' Protection Act--இலே இப்போது கொண்டு வந்திருக்கிற மாற்றம் என்னவென்று சொன்னால், கோயில்களுக்கோ, அல்லது சாரிடபிள் இன்ஸ்டிடியூசன்களுக்கோ ஏதாவது நிலங்கள் இருக்குமானால் அந்த நிலங்களுக்குப் பாதுகாப்பு உரிமை கிடையாது என்கிற ஒரு சட்டத்தை அரசு கொண்டு வந்திருக்கிறது. நிச்சயமாக நாங்கள் இதை வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறோம். அதே நேரத்திலே உண்மையிலே இதைச் செயல்படுத்துகிறபோதுதான் இதிலே பல சங்கடங்கள் வருகின்றன. கோயில்களுக்காக எழுதப்பட்ட

@ 9.11.1994 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

நிலங்கள் நிறைய உள்ளன. பல பேர்கள் கோயில்களுக்கு என்று தாராளமாகக் கொடுத்து விடுகிறார்கள். அந்த நிலங்களை கோயில் நிர்வாகம் யாருக்காவது கொடுப்பதற்கோ, அல்லது அவர்களே குத்தகை தாரர்களாக இருப்பதற்கோ, அல்லது அவர்களுக்கு விற்பதற்கோ சில உரிமைகள் கொடுக்கப்படுவதை நிச்சயமாகத் தடை செய்யவேண்டும். எனவே, அரசு கொஞ்சம் சீக்கிரமாக நடவடிக்கை எடுக்கவேண்டும். காரணம் ஏற்கனவே கோயில் சொத்துக்களை பல பேர்கள் அபகரித்துக் கொண்டு இருக்கிறார்கள். அதில் வீடுகள், கடைகள், மாடிகள் என்று கட்டி வைத்துக் கொண்டு பகடிக்கு விட்டு பிழைத்துக் கொண்டிருக்கிறார்கள். கோயில்களுக்கு என்று ஒதுக்கப்பட்ட இடம் கோயில்களுக்குப் பயன்படாமல் போய்க் கொண்டிருக்கின்றது. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், இந்தச் சட்டத்தை இங்கே நிறைவேற்றிக் கொடுத்த உடனே, உடனடியாக நடவடிக்கை எடுத்து, கோயில் சொத்துக்களை உடனடியாக மீட்டு, அவைகள் கோயில்களுக்கே உரிய வண்ணம் பயன்படுகிற வகையில். கோயில்களுக்கு வருமானத்தை ஈட்டித் தருகிற வகையில் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டு அமைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொன்னதைப் பற்றி அரசு எண்ணி, நடவடிக்கை எடுப்பதற்குத் தயாராக இருக்கிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். இது இன்று, நேற்று ஏற்பட்டதல்ல. இந்தியத் துணைக் கண்டம் விடுதலையாவதற்கு முன்னாலே கூட, இப்படிப்பட்ட கோயில்களுக்காக, அது இந்து கோயில்களாக இருந்தாலும் சரி, முஸ்லீம் கோயில்களாக இருந்தாலும சரி, அல்லது கிருத்துவக் கோயில்களாக இருந்தாலும் சரி, பலர் பல நல்ல காரியங்களுக்காக நிலங்களை எழுதி வைத்திருக்கிறார்கள். அப்படி நிலங்களை எழுதிவைத்த பிறகு, இன்றைக்கு பல தனவந்தர்கள் அதை தங்களுக்காக என்று ஆக்கிக் கொண்டு இருக்கிறார்கள். தனவந்தர்கள் அதை முழுமையாகவும் வைத்துக் கொண்டு இருக்கிறார்கள், பாதியாகவும் வைத்துக் கொண்டிருக்கிறார்கள். கட்டிடம் கட்டிக் கொண்டிருக்கிறார்கள். இவைகள் எல்லாம் எந்த நோக்கங்களுக்காகச் செய்யப்பட்டதோ, அந்த நோக்கங்களுக்கு மாறுபட்டதாக இருக்கிறது. இதனால, இந்துக் கோயில்களுக்கோ அல்லது பள்ளிவாசல்களுக்கோ, அல்லது கிருத்துவக் கோயில்களுக்கோ

வரவேண்டிய வருமானம் வராமல் போய் இருக்கிறது. 1921–ஆம் ஆண்டு என்றால், இன்றைக்குப் பார்த்துக் கொள்ளுங்கள், அதனுடைய நிலைமையை. இன்றைக்கு அந்த நிலத்தினுடைய மதிப்பு என்னவாகி இருக்கும் என்று எண்ணிப் பாருங்கள். அதற்கு வாடகை செலுத்தவேண்டும் என்று கேட்டால், உடனே நீதிமன்றத்திற்குச் சென்று விடுகிறார்கள் நீதிமன்றத்திற்குச் சென்று தடை வாங்கிவிட்டால், அவர்கள் கொடுத்துக் கொண்டிருக்கிற குறைந்த வாடகை கூட வருவதில்லை. ஆகவே, நீதிமன்றத்திற்குச் சென்றாலும் அது செல்லாது, இன்றைக்கு இந்த சட்டம் வந்துவிட்டால், நீதிமன்றம் சென்றாலும் செல்லாது. அந்த நிலங்களை எல்லாம் எடுத்து, எந்த நோக்கத்திற்காக அது செய்யப்பட்டதோ, அதற்காக, அதை உபயோகப்படுத்த வேண்டும் என்பதற்காகத்தான் இந்தச் சட்டம் கொண்டுவரப்படுகிறது. சென்னை மாநகரத்திற்கு மட்டுமல்லாமல், தமிழகத்திலே எங்கே இருந்தாலும், இந்தச் சட்டம் செல்லும் என்பதை உங்களுக்கு நான் தெரிவித்துக் கொள்கிறேன். உங்களுக்கு இந்தப் பட்டியலைப படித்துக் காண்பித்தால், ஒரு மணி நேரம், 2 மணி நேரம் அல்ல அதிக நேரமாகும். எவ்வளவு ஆயிரக்கணக்கான நிலங்கள் எந்தெந்தக் கோயில்களுக்குச் சொந்தமானதை, யார்,யார், எங்கெங்கே வைத்துக் கொண்டிருக்கிறார்கள் என்ற பட்டியலை நான் படித்தால், இங்கே நேரம் போதாது. உதாரணத்திற்கு ஒன்றைச் சொல்கிறேன். ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம் என்பதைப் போல, ஒன்றே ஒன்றை மட்டும் சொல்கிறேன். மைலாப்பூரிலுள்ள அருள்மிகு கபாலீஸ்வரர் கோயிலுக்குச் சொந்தமான 42 கிரவுண்ட். ஒரு கிரவுண்ட் என்ன விலை என்றால், அங்கே 20 லட்சம் இருக்கும் என்று நினைக்கிறேன். அல்லது குறைந்தது 10 லட்சம் இருக்கும் என்று நினைக்கிறேன். மைலாப்பூரில் 42 கிரவுண்ட், மற்றும் அது அல்லாமல் 1886 சதுர அடி பரப்பளவு உள்ள நிலத்தை மைலாப்பூர் கிளப், 99 வருடத்திற்கு குத்தகைக்கு வாங்கியிருக்கிறார்கள். வருடத்திற்கு எவ்வளவு தெரியுமா? ரூபாய். 157.50 நிர்ணயம் செய்து கொடுக்கப்பட்டது. மிகவும் மதிப்பு வாய்ந்த நிலமானதால், அந்த நிலத்தைக்கூட திருப்பிப் பெற முடியவில்லை. இது தொடர்பான வழக்கு சென்னை உயர்நீதி மன்றத்தில் இருக்கிறது. உயர் நீதிமன்றத்தில் இருக்கிறார்களே, அவர்கள்கூட சட்டம் படித்திருக்கிறார்கள். தப்பாகச் சொல்லக்கூடாது. சட்டத்தைத்தான் படித்தார்களேயொழிய, மக்களைப் பற்றிப் படிக்கவில்லை. நாட்டைப் பற்றி படிப்பதில்லை, நாட்டிலே என்ன நடக்கிறது என்று தெரியவில்லை. இந்தச் சட்டம் மக்களுக்காக இருக்கிறது என்பதையும் படிப்பதில்லை. உயர் நீதிமன்றத்திற்குப் போனால், சாதாரணமான மக்களுக்கு பொது அறிவு எல்லோருக்கும்

தெரிந்தது. 'It is a common sense' 1921-ஆம் வருஷம் வாடகைக்கு விடப்பட்டது. இன்றைக்கு அது மயிலாப்பூரில் இருக்கிறது. 42 கிரவுன்ட் ரூ.157 என்று சொன்னால். உடனே நீதிமன்றத்திற்குப் போனவுடன் அது எவ்வளவு இருந்தாலும் அந்தக் கேசைத் தள்ளிவிடலாம். ஆனால் இப்படிப்பட்ட கேஸ்களை எல்லாம் தூக்கி தூக்கி (குறுக்கீடு) நீதிமன்றத்திலே வழக்குகள் ஏன் அதிகமாக இருக்கிறது என்றால், நீதிமன்றத்திலே உள்ளவர்கள்--நான் இங்கே சொல்கின்ற காரணம், நீதிமன்றத்தார்கள் என் மேல் கண்டனம் கொண்டுவந்தாலும் சரி, இல்லை என்னைக் கொண்டுபோய் ஜெயிலிலே போட்டாலும் சரி, (குறுக்கீடு)

பிற்பகல் 12-40

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவர்கள் கொண்டுவருவது வேறு. நமக்கு இருக்கிற விதி, நீதிமன்ற விவகாரம் பற்றி எல்லாம் விமர்சனம் செய்யக் கூடாது என்று இருக்கிறது. இது நம்மை நாமே கட்டுப்படுத்திக் கொள்வது.

மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம்: அதைப் பற்றி எல்லாம் கவலைப்படாமல் இதை நான் சொல்வதற்குக் காரணம் . . . . (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நம்முடைய விதியைப்பற்றிக் கவலைப்படாமல் இருக்கக் கூடாது. அதைப் பற்றி விமர்சனம் செய்யக் கூடாது என்று நாம் விதி வகுத்து வைத்திருக்கிறோம்.

மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம்: இல்லை நான் சொல்வது வேறு. இப்படிப்பட்ட வழக்குகள் எல்லாம் வருகிறபோது, நீதிமன்றம் விரைவிலே முடிவு எடுக்காமலும், அந்த வழக்கு வருகிறபோது முடிவைப் பற்றி எண்ணிப் பார்க்காமலும் இருப்பதை நான் இங்கே சொல்லி இருக்கிறேன். சாதாரணமாக அரசு எடுக்கிற நிலம் 1000 ரூபாய்க்கு எடுத்தால், 2 மடங்கு, 3 மடங்கு போடலாம். 1000 மடங்குகூடப் போடுகிறார்கள். 1000 மடங்கு கூடப் போடுகிறார்கள். என்றால், அவர்கள் தேவலோகத்திலிருந்து வந்திருக்கிறார்களோ, இல்லையோ, எனக்குத் தெரியாது. அவர்கள் தவறு செய்கிறார்கள். இப்படிப்பட்டவை எல்லாம் இல்லாமல் இருப்பதற்காக சமுதாயத்தினுடையநலன் கருதி, பொதுமக்களுடைய சொத்தைக் காப்பாற்ற வேண்டுமென்பதற்காக இந்தச் சட்டத்தை இந்தச் சட்டப் பேரவையிலே இந்த அரசு கொண்டு வந்திருக்கிறது. இதை நிறைவேற்றித் தர வேண்டுமாய் நான் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 மற்றும் 3, திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 மற்றும் 3, சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டுமென்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டுமென்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் ' இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு.எஸ்.டி. சோமசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1994--ஆம் ஆண்டு சென்னை மாநகரக் குடியிருப்போர் பாதுகாப்பு (திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 52/1994) நிறைவேற்றப்பெற வேண்டும்".

எனக் கோருகிறேன்.

1994 நவம்பர் 10]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

(ஊ) இயக்கூர்திகள் (மோட்டார் வண்டிகள்) வரிவிதிப்பு (மூன்றாம் திருத்த) சட்டமுன்வடிவு, 1994.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 1994-ஆம் ஆண்டு தமிழ்நாடு இயக்கூர்திகள் (மோட்டார் வண்டிகள்) வரிவிதிப்பு (மூன்றாம் திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 43/1994), மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

***மாண்புமிகு திரு.கே. ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1994-ஆம் ஆண்டு தமிழ்நாடு இயக்கூர்திகள் (மோட்டார் வண்டிகள்) வரிவிதிப்பு (மூன்றாம் திருத்த) சட்ட முன்வடிவு @ (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 43/1994) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ள பெறவேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சி. ஞானசேகரன்.

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மோட்டார் வெஹிகில்ஸ் டேக்சேஷன். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதுதான் வாய்ப்பு என்று பார்க்கிறீர்களா? (சிரிப்பு)

திரு.சி. ஞானசேகரன்: இது தேவையா என்கிற ஒரு கேள்வியை நான் உங்களிடையே கேட்க விரும்புகிறேன். காரணம், இந்த இடத்தில் ஏற்கனவே ஒரு மோட்டார் வெஹிகளுக்கு வரியைக் கூடுதலாகச் செலுத்திவிட்டால் அதை ரீபண்டு செய்யவேண்டுமென்று சொன்னால்

@ 9.11.1994 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.